## வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி - 2015

-----------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா (கம்பனி) கம்பனியின் மற்றும் கம்பனி மற்றும் அதனுடைய உரிமை மூலதன முதலீட்டாளர் (கம்பனி மற்றும் முதலீட்டாளர்கள்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்ட கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்ளும் போது பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் செலுத்தவேண்டிய கலால் வரியாக ரூபா 65.8 மில்லியன் பொறுப்பினை உள்ளடக்கியுள்ளது. இத்தகைய வரியின் உள்ளகத்தன்மை தொடர்பில் குறிப்பிட்ட தொகையில் நிச்சயமற்றதன்மையுள்ளதால் இந்தத் தொகையினை பொறுப்பாக இனங்காணல் சந்தேகத்திற்குரியதாகும். 2010 ஆம் ஆண்டிற்கு முன்னரான கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய இத் தொகையானது அன்றிலிருந்து வரி அதிகாரசபைகளுடன் எந்தத் தொடர்பாடலையும் கம்பனியானது வைத்திருக்காததுடன் அங்கு இதனைச் செலுத்துவதற்கான எந்தக் கோரிக்கையும் காணப்படவில்லை. இந்தத் தொகையினை பொறுப்பாக இனங்காணலின் அடிப்படையுடன் தொடர்புடைய நிச்சயமற்ற குறித்த தொகையுள்ளதால் கம்பனியின் பொறுப்புக்களை அதிகரிக்கமுடியாதிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியானது விற்கப்பட்ட ஒவ்வொரு சிலிண்டர்களுக்காகவும் வைப்பொன்றினை சேகரிக்கின்றது. ஏனைய கூறானது மீள்நிதியளிக்கப்படாததென்று கருதப்பட்ட அதேநேரம் சிலிண்டர் வைப்பின் கூறானது மீள்நிதியளிக்கக்கூடியது என கருதப்பட்டது. கம்பனியின் கொள்கையின் பிரகாரம், மீளநிதியளிக்கமுடியாத வைப்பானது சிலிண்டர் விற்கப்பட்ட ஆண்டுகாலப்பகுதிக்கான வருமானமாக இனங்காணப்பட்டது. கடந்த மூன்று வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக இனங்காணப்பட்ட மீள்நிதியளிக்கக்கூடிய வைப்புப் பொறுப்பு வருடாந்தமாக முக்கியமாக அதிகரித்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது ரூபா 5,144 மில்லியனாகவிருந்தது. ஒப்பந்தப் பொறுப்பு உள்ளபோதும் கடந்தகால அனுபங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட அளவீடானது நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட பொறுப்பின் அளவொன்றில்லை என்பதற்குரிய முழுமையான சாள்றாகும்.

(ஆ) 2010 இலிருந்து வியாபார வருமதிகள் மற்றும் வியாயபர செலுத்த வேண்டியவைகளாக முறையே ரூபா 3,190,946 மற்றும் ரூபா 422,295 தொகை இனங்காணப்பட்டதுடன் இத் தொகைகள் முறையே முன்னைய தலைமைக் கம்பனியின் தொடர்புபட்ட தரப்பினர்களுக்குரியதாகும். ஆகையால், கம்பனி மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனத்திற்குமிடையில் முறையான தொடர்பாடல் இல்லாமையால் இந்தத் தொகையின் அறவீடு அல்லது தீர்ப்பனவு நீண்டகாலத்திலுள்ளது.

(இ) ரூபா 4.24 மில்லியன் மற்றும் ரூபா 521,324 மில்லியன் தொகையான செலுத்தவேண்டிய கணக்குகள் 2014 திசெம்பர் மற்றும் முறையே 2010/2011 இலிருந்து தீர்ப்பனவு செய்யாமல் மாற்றமடையாதிருந்தது.

2.4 **தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள்**

----------------------------------------------------------------------

கம்பனியின் முக்கிய தலைமை நிறுவனமாகவுள்ள பட்டியலிடப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் (எஸ்எஸ்ஜசீ) கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகக்கட்டிடம் உடமையாக்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட இடங்களை பயன்படுத்துவதற்காக கம்பனி மாதாந்த வாடகையை செலுத்துகின்றது. அதே தலைமை கம்பனியின் கீழ் செயற்படுகின்ற வரையறுக்கப்பட்ட கன்வில் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனிக்கு இரு மாடியினை கம்பனி உபகுத்தகைக்கு வழங்கியிருந்தது. எனினும், எஸ்எஸ்ஜசீக்கும் கம்பனிக்குமிடையில் குத்தகை உடன்படிக்கை இல்லாததிருந்ததுடன் கம்பனிக்கும் வரையறுக்கப்பட்ட ட கன்வில் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனிக்கும் இடையில் எந்தவித உப குத்தகை உடன்படிக்கையும் இருக்கவில்லை.

3. **நிதிசார் மீளாய்வு**

----------------------------

3.1 **நிதிசார் விளைவுகள்**

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 5,434 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 5,342 வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 92 மில்லியன் ஆன பின்னடைவைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது விற்பனைக்கிரயம் ரூபா 5,017 மில்லியனால் குறைவடைந்தமைக்கு எதிராக ரூபா 5,199 மில்லியனால் வருமானம் குறைவடைந்தமையும் ரூபா 211 மில்லியனால் செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்தமையும நிதிசார் விளைவுகளின் பின்னடைவைற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தது.

3.2 **பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு**

----------------------------------------------------

3.2.1 **இலாபத்தன்மை**

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருமானம்**

---------------

2015 ஆம் ஆண்டின் போது மூன்று சந்தர்ப்பங்களில் (12.5 கிலோகிராம் சிலிண்டர்க்ள்) எல்பிஜீ உள்நாட்டு சிலிண்டர் விலை குறைவு காரணமாக முன்னைய ஆண்டின் ரூபா 29,084 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் வருமானமானது ரூபா 5,199 மில்லியனால் அல்லது 18 சதவிதத்தால் குறைவடைந்திருந்தது.

**(ஆ) விற்பனைக் கிரயம்**

-------------------------

எல்பிஜீ இன் ஒப்பந்த விலை 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக கீழ்நோக்கி மீள்திருத்தப்பட்டிருந்ததுடன் சராசரி எல்பிஜீ சந்தை விலை 2015 ஆம் ஆண்டில் ஒரு எம்ரீக்காக சராசரியாக யூஎஸ்டி 431 ஆகவிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் இது யூஎஸ்டி 805 ஆகவிருந்தது. கடந்த ஆறு ஆண்டுகளிற்கான ஆகக்குறைந்த எல்பிஜீ விலையாகவிருந்த எல்பிஜீ இன் சந்தைவிலை 2015 திசெம்பரில் யூஎஸ்டி 336 வரை குறைவடைந்திருந்தது. ஆகையால் கம்பனியின் விற்பனைக்கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 5,017 மில்லியனால் அல்லது 21 சதவீத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

### 4.1 முகாமைத்துவக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா கம்பனிக்கு (தனியார்) குத்தகைக்கு கொடுக்கப்பட்ட காணி மீள்குடியேற்றல் சபையால் உடமையாக்கப்பட்ட ஹெறவலப்பிற்றியவிலுள்ள அமைந்துள்ள காணியில் கம்பனியின் மீள்நிரப்பல் பொறி 2010 இலிருந்து செயற்படுகின்றது. எனினும், கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா கம்பனிக்கும் (தனியார்) இடையில் உப குத்தகை உடன்படிக்கை இருக்கவில்லை. கம்பனியால் உரிய திகதியில் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனிக்கு எந்த உப குத்தகை கட்டணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வரையறுக்கப்பட்ட கனோவின் ஹொட்டல் மற்றும் ஸ்பா (தனியார்) கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் உடமையாக்கப்பட்ட காணி மீது எரிபொருள் நிலையமொன்றை கம்பனியானது தற்போது நிர்மாணிக்கின்ற போதிலும் கம்பனியானது இந்தக் காணியை பயன்படுத்துகின்றது. வரையறுக்கப்பட்ட கனோவின்ஹொட்டல்கள் மற்றும் ஸ்பா (தனியார்) கம்பனியுடன் குத்தகை உடன்படிக்கையிலீடுபடுவதற்கிருந்தது. மேலும் கம்பனியானது நடைமுறையில் ஆதனத்தை பயன்படுத்துவதற்கான கம்பனியினது வாடகையை செலுத்தியிருக்கவில்லை.

(இ) 2013 யூன் போது எல்பிஜீ பொருள் இறக்குமதிக்காக துறைமுகம் மற்றும் விமான நிலையம் அபிவிருத்தி தீர்வை (பிஏஎல்) ரூபா 15.5 மில்லியன் தொகையை கம்பனி செலுத்தியது. எனினும், நகர்வு இரத்துச் செய்யப்பட்டு அந்தத்தொகை தொடர்ச்சியாக வருமதியாக இனங்காணப்பட்டிருந்தது. ஆகையால் கம்பனியானது அந்தத் தொகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஈ) அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு மொத்த கொள்கலன் வைப்பு வருமதிகளில் ரூபா 4.9 மில்லியன் தொகையானதுடன் அதில் 2006 தொடக்கம் 2014 காலப்பகுதியுடன் தொடர்புடையது 4.55 மில்லியனாகும். கம்பனியானது கொள்கலன் வைப்புக்களை காலதாமதமில்லாமல் அறவிட்டிருந்ததென உறுதிப்படுத்துவதற்கு பின்தொடர் செய்முறைகள் அமுல்படுத்தப்பட்டிருந்ன.

### 4.2 சந்தைப் பங்கு

-------------------------

எல்பீஜீ துறையானது தொடர்ச்சியாக வளர்ச்சியடைகின்றதுடன் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி சந்தை முன்னோடியாகவிருப்பதுடன் 2015 இல் இலங்கை சந்தையின் எல்பீஜீ தேவைப்பாட்டின் 69 சதவீதத்தினை வழங்கியிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது மற்றும் கடந்த நான்கு வருடங்களிலும் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனியின் விற்பனை அலகுகள் அதிகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**மெற்றிக் தொன்னில் தொகை**

| **சிலிண்டர்களின் வகை** | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
|---|---|---|---|---|---|
| 2.3 Kg | 9,164 | 8,434 | 7,441 | 6,120 | 4,917 |
| 5 Kg | 3,742 | 1,433 | 107 | - | - |
| 12.5 Kg | 157,683 | 122,225 | 116,682 | 114,867 | 113,585 |
| 37.5 Kg | 19,442 | 17,976 | 17,288 | 16,117 | 15,595 |
| மொத்தம் | 19,495 | 21,129 | 17,165 | 17,163 | 14,967 |
| **மொத்தம்** | ===== | ===== | ===== | ===== | ===== |
| | 196,530 | 161,330 | 151,133 | 148,148 | 144,144 |
| | ===== | ===== | ===== | ===== | ===== |

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டு விடயம்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| பெறவேண்டிய கணக்குகள் | நீண்டகால நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுதல் மிகவும் பலவீனமாகவிருந்தது. |
| தகவல் தொழில்நுட்ப பொது கட்டுப்பாடுகள் | முகாமைத்துவக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறையிலுள்ள குறைபாடுகள் திருத்தப்பட வேண்டும். |